மலர் 2 இதழ் 1 ஜூலை, 2017 ISSN : 2454-3993

# தசாவதாரமும் பரசுராமரும்

முனைவர் சோ.கி.கல்யாணி
தமிழ்த்துறைத் தலைவர்,
ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரி(கு)
மதுரை

**முன்னுரை**

திருமால் வழிபாட்டை மையமாகக்கொண்ட வைணவ மதம், காலந்தோறும் புதிய கருத்தாக்கங்களைத் தன்னுள் ஏற்று வளர்ந்து வந்துள்ளது. வேத, உபநிடத காலத்தில் இல்லாத பல கருத்துகள் மகாபாரத, இராமாயண நூல்களில் உள்ளன, மகாபாராதத்தின் பிற்சேர்க்கை எனப்படும் பகவத்கீதையில் அவதாரக் கோட்பாட்டின் ஆதாரம் உள்ளது. “உலகில் தர்மம் அழிந்து அநீதி தலையெடுக்கும் போதெல்லாம் திருமால் தோன்றுவார்” என்பது மக்களைக் காக்கும் பணியை முதன்மைப்படுத்துவதோடு சக்தி, வலிமை, வளம் உடையவற்றைத் தன்னதாக அடக்கிக்கொள்ளும் பண்பின் தோற்றுவாயாகவும் உள்ளது. அவதாரம் என்றால் ‘இறங்கி வருதல்’ என்று பொருள். புராணங்களின் வழி இக்கருத்து ஊன்றப்பட்டு, காலந்தோறும் அவதாரங்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே செல்கிறது. பரிணாம முறைப்படி பின் அவற்றைச் சமய அறிஞர் வரையறைப்படுத்தி மாற்றி அமைத்தனர். இவ்வகையில் பிறப்பால் அந்தணராயும் குணத்தால் சத்திரியனாயும் இருக்கும் பரசுராமர், சிவனை வழிபட்டு உயர்ந்தவர். அரச குலத்தை ஒடுக்கும் இவருடைய தொடர் செயல்கள் தந்தையை இழந்ததில் தொங்கி, அவருடைய முன்னோர்களின் அறிவுரையில் ஒடுங்குகிறது. இவரது சத்திரியக் குணம். இராமன் சிவதனுசை வளைத்து முறித்தபோது மீண்டும் உயிர் பெறுகிறது; இராமனை வில்வளைக்குமாறு அறைகூவல் விடுக்கிறார்; அதில் தோல்வியும் பெறுகிறார். பின்னாளில் அவர் திருமாலின் ஆவேச அவதாரமாகக் கருதப்பட்டு வைணவத்தில் உள்வாங்கப்படுதலை இக்கட்டுரை முன்வைக்கிறது.

**பரசுராமரும் ஸ்ரீராமரும்**

ஏழு சீரஞ்சீவிகளில் ஒருவராகப் போற்றப்படும் பரசுராமர் இராமாயணம், மகாபாரதம், என்றிரு இதிகாசங்களிலும் இடம் பெறுபவர். ரிசீக முனியின் மகனாகப் பிறந்தாலும் அவர் தன் வாழ்வின் பெரும் பகுதியைப் போர் செய்வதில் கழிக்கிறார். பிற்காலச் சமயவாதிகளால் விஷ்ணுவின் பத்து அவதாரங்களில் ஒருவராக

உள்வாங்கப்படுகிறார். மன்னர்களை அழிக்கும் அவர் செயல் (திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் காணும்) திருமாலின் செயலினின்று வேறுபடுகிறது. இது அவர் வழிபடும் சிவனுக்கே உரியது. சிவபக்தனான பரசுராமரிடம் விஷ்ணுவில் உள்ளது. இதை வளைத்து நாணேற்றத் தவவலிமையை இலக்காகத் தருகிறார். பரசுராமர் தன் தாய்க்கு எமனாகிட ஸ்ரீராமரோ தன் தந்தையின் இறப்புக்குக் காரணமாகிறார். பரசுராமர் அரச குலத்தைக் கருவறுக்க ஸ்ரீராமரோ அரக்கர் குலத்தை அழிக்கிறார். மந்திர உணவை உண்டதால் பிறந்த பரசுராமர். யாகத்தில் தோன்றிய உணவு (பாயாசம்) உண்டதால் தோன்றிய ஸ்ரீராமருடன் போரிடுகிறார். தாய்வழியில் சந்திரகுலத்தைச் சார்ந்த பரசுராமர் சூரிய குலத்தைச் சார்ந்த ஸ்ரீராமருடன் முரண்படுகிறார். ரஜோகுணம் கொண்ட பரசுராமர் சத்வகுணம் கொண்ட ஸ்ரீராமருடன் போரிட்டுத் தோற்கிறார். பின் அவரை வாழ்த்தி விடைபெறுகிறார். காலப்போக்கில் பார்க்கவராமர் என்ற பரசுராமர் விஷ்ணுவின் அம்சமான தசரதராமருடன் இணைக்கப்பட்டு ஒன்றாகி விடுகிறார்.

**இலக்கியச் சான்றுகள்**

மகாபாரதம், பகவத்கீதை, வால்மீகி இராமாயணம், வராக புராணம், ஸ்ரீ பரசுராம கல்ப சூக்தம், கீதகோவிந்ததம் என்பவற்றில் பரசுராமரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. ஸ்ரீமத்பாகவதம் ஒன்பதாம் காண்டத்தில் இவரது வரலாறு கூறப்படுகிறது. தமிழில் அகநானூறு (220–ஆம் பாடலிலும்) கம்பராமாயணத்தில் பாலகாண்டத்தின் இறுதியான பரசுராமப் படலத்திலும் இவரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. சுவாமி வேதாந்ததேசிகர் தம் ‘தசாவதர ஸ்தோத்திரம்’ என்ற நூலில் இவரைப் புகழ்ந்து போற்றியுள்ளார். இவைதவிர நாட்டுப்புறக் கதை மரபிலும் பரசுராமர் இடம் பெறுகிறார்.

**பரசுராமர் பிறப்பு**

“ஊர்வசியின் மகன் வழி தோன்றிய காதி மகாராஜாவுக்கு சத்தியவதி என்றொரு மகளிருந்தாள். அவளை மணக்க விரும்பிய ரிசீகமுனி காதி அரசரைக் கேட்டார். அரசர் ஸ்ரீ தானமாக ஒரு காது கருப்பாகவும் உடல் சூரிய ஒளி போல் பிரகாசமாயும் உள்ள ஆயிரம் குதிரைகளைக் கேட்டார். முனிவரும் அவற்றைத் தந்து சத்தியவதியை மணந்தார். சிறந்ததொரு குழந்தையை மகனாகப் பெறவேண்டிச் சத்தியவதியும் அவள் தாயும் ரிசீக முனிவரை ‘யாக நிவேதனம்’ சமைத்து தரும்படி வேண்டினர். அவரும் இசைந்து தன் மனைவிக்கும் மாமியாருக்கும் எனத் தனித்தனியே மந்திரங்களைக் கூறி நிவேதனம் சமைத்தார். பின் நீராடச் சென்றார். ரிசீகர் இல்லாத நேரம், முனிவர் தன்மனைவிக்காக சமைத்த நிவேதனம் சிறந்ததாக இருக்கும் என நினைத்து சத்தியவதியின் தாய் அதை தருமாறு தன் மகளிடம் கேட்டாள். அவளும் தனக்குரியதைத் தாய்க்கு அளித்து தாய்க்கென சமைக்கப்பட்டதை தான் உண்டாள். நீராடி வந்த முனி நடந்தவற்றை உணர்ந்தார். தன் சகோதரன் ஆன்மீகத்தில் சிறந்தவனாயுமிருப்பான் என்றார். விபரீதத்தை உணர்ந்த சத்தியவதி, தன்மகன் கொடிய சத்திரியனாகப் பிறக்க வேண்டாமே! என வேண்டினாள். அப்படியானால் உன் பேரன் அவ்வாறு பிறப்பான் என்று ரிசீகர் கூறினார். இதன் பின் சத்தியவதிக்கு ஜமதக்னி முனி பிறந்தார். அவருடைய இளைய மகன்தான் பரசுராமன். கற்றிந்த பண்டிதர்கள் அனைவரும் அவரை வாசுதேவனின் புகழ் பெற்ற அம்சமாக அதாவது அவதாரமாக ஏற்றுக் கொள்கின்றனர்” என்கிறது பாகவதம்.

திரேதாயுகம் முடிந்து துவாபரயுகம் துவங்கும் சமயத்தில் மக்களை மிகவும் கொடுமைபடுத்துபவர்களாக அரசர்கள் விள்ங்கினர். அவர்கள் வேதம் ஓதி யாகம் புரியும் பிராமணர்களை வருத்தினர். எனவே சத்திரியர்க்கும் பிராமணர்களுக்கும் தீராப்பகை தொடங்கியது. வைகாசி மாத திரிதியை தினத்தன்று சிவனருளால் ரேணுகாதேவிக்கு பரசுராமர் விஷ்ணுவின் அம்சமாகப் பிறந்தார். இந்நாள் அட்சயதிருயை நாளாகத் தற்போது கொண்டாடப்படுகிறது. வராகபுராணம் “இந்நாளில் யாரொருவர் விரதமிருந்து பகவானை வணங்குகிறார்களளோ அவர்கள் பிரம்மலோகம் அடைவர். மறுபிறவியில் அரசராகப் பிறப்பர்” என்கிறது.

**சிவனும் பரசுராமரும்**

இளவயது முதலே பரசுராமர் சிறந்த சிவபக்தராகத் திகழ்ந்தார் என ஊகிக்கமுடிகிறது. கடுந்தவமியற்றி சிவனிடமிருந்து ‘பரசு’ என்ற ஆயுதத்தைப் பெற்றார். சிவனுக்கு மாணாக்கனாகி அவரிடமிருந்து வில்வித்தைகளைக் கற்றார். தன்தவ வலிமையால் பிரமாண்ட அஸ்திரம் (விஷ்ணு வில்), பாசுபத அஸ்திரம் என்ற மூன்று ஆயுதங்களைப் பெற்றார். இவற்றில் விஷ்ணுவில் திருமாலால் ரிசீக முனிவர்க்கு அளிக்கப்பட்டது. தன் தந்தையிடமிருந்து பரசுராமர் அதனைப் பெற்றார்.

சிவனிடமிருந்து ‘பரசு’ என்ற ஆயுதத்தைப் பெற்ற பரசுராமர் ஒருமுறை சிவனைக் காணச் செல்கையில் விநாயகரால் தடுக்கப் பெற்றார். கோபம் கொண்ட பரசுராமர் தனது ஆயுதமான ‘பரசு’ வை விநாயகர் மீது ஏவினார். அது விநாயகரின் தந்தத்தை முறித்தது. தனது தந்தையால் அளிக்கப்பட்ட ஆயுதம் பரசு என்பதையும் விநாயகர் உணர்ந்தார். தன் செயலுக்கு மன்னிப்புக் கேட்ட விநாயகருக்கு தன் பரசுவைப் பரிசாகப் பரசுராமர் அளித்ததாக நாட்டுப்புறக் கதை உள்ளது.

“பரசுராமனும் சுப்பிரமணியனும் பரமசிவனிடம் வில் முதலிய ஆயுதப் பயிற்சியை முடித்தபின்பு இவர்களில் உயர்வு தாழ்வு அறியும்பொருட்டு சிவன் உமாதேவியின் முன்னிலையில் கிரௌஞ்ச மலையைக் காட்டி ’இதனைத் துளைத்திடுக’ எனக் கூறினார். முருகனால் அம்பு தொடுத்து கிரௌஞ்ச மலையைத் துளைக்க இயலவில்லை. பரசுராமர் வீரத்தோடு அம்பெய்து அம்மலையில் துளையிட்டுக் காட்டினார். அதன்பின் முருகக்கடவுள் வேலாயுதத்தை வீசியெறித்து அம்மலையைப் பிளந்தார் என்ற வரலாற்றைக் கம்பர் தமது பரசுராமப் படலத்தில் காட்டுகிறார். கிரௌஞ்ச மலைக்குத் தென் திசையிலுள்ள அன்னப் பறவைகள் பனிக்காலங்களில் தம்மிடத்தைவிட்டு பரசுராமனால் உண்டாக்கப்பட்ட துளை வழியாக இமயலையிலுள்ள மானசரோவரை அடைகின்றன” என்றும் கூறுகிறார். இதனை.

“கமையொப்பதொர் தவமுஞ்சுடு கனலொப்பதோர் சினமும்
சமையப்பெரி துடையானெதிர் தளர்வுற்றிடை தவிரும்
அமையத்துயர் பறவைக்கினி தாறாம் வகை சீறாச்
சிமயக்கிரி யுருவத்தனி வடி வாளிக டெரிவான்” (14ம் பாடல்)

என்ற வரிகளால் அறியலாம்.

சிவனிடமிருந்து பரசுவைப் பெறும்போது ’கர்வம்மிக்க’ அரசர்களையும் தர்மவழி தவறியவர்களையும் அசுரர்களையும் அழிக்குமாறு’ சிவன் ஆணையிட்டதாகக் கூறப்படுகிறது. இவரும் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் சென்று தீமை புரியும் அரசர் அசுரர்களை அழித்து மக்களைக் காத்தார்.

**போர் வலிமை**

தீமை புரியும் அரசர்களுக்கு எமன் போன்ற பரசுராமரிடம் மகாபாரத்தில் இடம்பெறும் அம்பை தன்கது இழைக்கப்பட்ட அநீதி கூறிப் பீஷ்மரை அழிக்க உதவி கோரினார். அவரும் பீஷ்மருடன் போரிட்டார். எனினும் போரில் பரசுராமர் தோற்றார். இக்குறிப்பு பரசுராமரின் தொன்மையைத் காட்டுகிறது.

அடுத்தாக, இராவணனைச் சிறை பிடித்த பெருமைக்கு உரிய கார்த்தவீர்யாசுனனைப் பரசுராமர் வென்றார். கார்த்தவீர்யாச்சுனன் ஒரு காலத்தில் ஜமதக்னி ஆசிரமத்தை அடைந்து விருந்துண்டு மீளும்போது, அங்கிருந்த யாகப்பசுவை அவரது அனுமதியின்றிக் கவர்ந்து சென்றான். இதனையறிந்து பரசுராமன் அங்குச்சென்று அவனுடைய பெரிய சேனையை அழித்து அவனது ஆயிரம் தோள்களையும் தலையும் தனது கோடாலிப் படையால் வெட்டி வீழ்த்தி வெற்றி கண்டார். யாகப்பசுவை மீட்டு வந்து ஜமதக்னியிடம் அளித்தார். இதனைக் கம்பர்.

“அயிர் சுற்றிய கடன்மாநில மடையத்தனிப் படரும்
செயிர் சுற்றிய படையானடன் மறமன்னவர் திலதன்
உயி ருற்றதொர் மரமாமென வோராயிர முயர்தோள்
வயிரப்பணை துணியத்தொடு வடிவாய்மழு வுடையான்” (12) எனகிறார்.

பரசுராமன் கார்த்தவீர்யாச்சுனனைக் கொன்றதால் அவன் குமார்கள் 10,000 பேரும் பரசுராமனைப் பழிக்குப் பழி வாங்க நினைத்தனர். பரசுராமன் இல்லாத சமயம் ஜமதக்னியைக் கொன்று அவரது தலையைக் கொண்டு போயினர். அப்போது ஜமதக்கனியின் மனைவி ரேணுகா 21 முறை தன் மார்பில் அடித்துக்கொண்டு புலம்பினதால் 21 தலைமுறை சத்திரியர்களைப் பரசுராமர் கொன்றார் என்பதைக் கம்பர் கூறுகிறார். தான் முன்பே சபதம் செய்தபடி தான் கொன்ற அரசர்களது இரத்த வெள்ளத்தால் சியமந்தபஞ்சகமென்ற இடத்தில் ஒன்பது தடாகங்களை ஏற்படுத்தி அவற்றில் தந்தைக்கு தர்ப்பணம் செய்தார் என்றிரு செய்திகளைப் பாகவதமும் கம்பராமாயணமும் கூறுகின்றன.

**இயற்கையை வெற்றி கொள்ளல்**

பரசுராமர் இயற்கையை வெற்றிகொள்ளும் கலையைத் (உயிர் தரும் கலை) தன் தந்தையிடம் பெற்றிருக்கலாம். ஒரு நாள் ரேணுகா கங்கை கரையில் நீர் கொணரச் சென்ற போது, கந்தர்வ ராஜன் அப்சரஸ்களுடன் விளையாடுவதைக் கண்டு மதி மயங்கினாள். விளைவாக. எப்பொழுதும்போல் ஈரமணலில் பானை செய்வது இயலாதுபோனது. வெறுங்கையுடன் திரும்பி வந்த ரேணுகாவைக் கொல்லும்படி ஜமதக்னி தன் மூன்று மகன்களுக்கும் ஆணையிட்டார். அவர்கள் ஒவ்வொருவராக

மறுத்தனர். இளைய மகனான பரசுரமரிடம் அவ்வாறே கூறவே பரசுராமர் தன் தாயையும் சகோதரர்களையும் கொன்றார். மகிழ்ந்த தந்தை பரசுராமரிடம் விரும்பிய வரத்தைக் கேள்! எனக் கூற தன் தாயையும் சகோதரர்களையும் உயிர்ப்பித்து தருமாறு வேண்டினார். மேலும் "என் தாயும் சகோதரர்களும் என்னால் கொல்லப்பட்ட நினைவே இல்லாமல் உயிர் பெறட்டும்" எனப் பரசுராமர் வேண்டியதாகப் பாகவதம் கூறுகிறது.

இந்நிகழ்ச்சியை அடிப்படையாகக்கொண்டு மாரியம்மன் ஆக ரேணுகா தேவியை வழிபடும் மரபு நாட்டுப்புறக் கதைமரபில வழங்கி வருகிறது. ரேணுகா பரசுராமனுக்குப் பயந்து தாழ்ந்தகுலப் பெண்ணொருத்தியின் வீட்டில் அடைக்கலம் புகுந்து அவளுடைய உடையை உடுத்துகிறாள். வேகமாக வந்த பரசு தன் தாயின் உடை அணிந்த பெண்ணை வெட்டி விடுகிறான். அப்போது வெளிப்பட்ட தன் தாயின் தலையையும் வெட்டுகிறான். பின் தந்தையின் வரத்தால் உயிர்ப்பிக்கும்போது, உடல் வேறு தலைவேறாக மாற்றிப் பொருத்திவிடுகிறான். எனவே. ரேணுகா தேவியின் தலையை மட்டும் வணங்கும் மரபு கடைபிடிக்கப்படுகிறது. இதைப் பின்பற்றியே சிவனைச் சந்திக்கச் சென்ற தன்னைத் தடுத்த விநாயகரின் தலையையும் பரசுராமர் துண்டித்து இருக்கலாம். யானைத் தலையைப் பொருத்திப் பரிகாரமாகப் பரசுவையும் அணிந்து இருக்கலாம். இதை அறிந்து கார்த்தவீர்யாச்சுனனின் மகன்கள் ஜமதக்னியின் தலையைத் தங்களுடனேயே எடுத்துச் சென்றனர். "தன் தந்தையின் தலையைக் கார்த்தவீர்யாச்சுனரின் மகன்களைக் கொன்று மீட்ட பரசுராமர், அதைக் கொணர்ந்து தருப்பைப் புல் மீது கிடத்தப்பட்ட உடலுடன் பொருத்தினார். யாகச்சடங்குகளை முடித்த பரசுராமர் குளித்து முடித்தபின் மேகமற்று ஆகாயத்தில் உள்ள சூரியனைப் போல காணப்பட்டார்" எனப் பாகவதம் கூறுகிறது. "பரசுராமரால் வணங்கப்பட்டு முழு உயிர், ஞாபகசக்தி கொண்டெழுந்த ஜமதக்னி ஏழு நட்சத்திர மண்டலங்களிலுள்ள ரிஷிகளில் ஏழாவது ரிஷியானார்" என்றும் பாகவதம் கூறுகிறது. மேலும். "மகேந்திரபர்வதம் என்ற மலைப் பிரதேசத்தில் பகவான் பரசுராமர் மதிநுட்பமுள்ள பிராமணராக இன்றும் வாழ்ந்து வருகிறார். அவர் அடுத்த மன்வந்தரத்தில் (மனுவின்காலம்) சிறந்த ஏழு முனிவர்களில் ஒருவராக விளங்குவார் எனப் பாகவதம் கூறுகிறது. இது அவரது சிரஞ்சிவித் தன்மையைக் காட்டுகிறது. காசிபமுனிவர் பரசுராமனின் கர்வத்தை அழிக்கும்விதமாக "நீ எனக்குத் தானமாகத் தந்த நிலத்திலே வசிப்பது தகுமா? என்க கேட்டார். அவர் வருணன் அனுமதியுடன் தன் கோடாலிப் படையைக் கடல்மீது வீசியெறிகிறார். அது விழுந்த அளவு இடத்தை விட்டுக் கடல் ஓதுங்கிச் சென்றது. கடல் தனக்களித்த இடத்தில் பரசுராமர் வாழ்வதால் அவ்விடம் பரசுராமசேத்திரம் என்று இன்றும் இழைக்கப்படுகிறது. இந்த கருத்தைக் கம்பர்.

"சையம்புக நிமிரக்கட றமுவும்படி சமைவான்
மையின்னுயர் மலைநூறிய மழுவாளவன் வந்தான்" (15ம் பாடல்)

என்ற வரிகளால் கூறுகிறார். தற்போதையக் கேரளா, கொங்கன், கர்நாடகா, கோவா, மகாராஷ்டிரா என்ற பகுதிகள் அடங்கியதே இப்பரசராம சேத்திரம் ஆகும். கடல்மீது பரசுராமர் ஆணை செலுத்தியதைப் பாகவதம் குறிப்பிடவில்லை என்பது கருதத்தக்கது. பாகவதத்தின்படி பரசுராமர் மகேந்திரமலையிலேயே வசித்து வருகிறார்.

**கொடைத்தன்மை**

மிகுந்த கோபமும், தவ ஆற்றலும் கொண்ட பரசுராமர், கொடைத்தன்மை உடையவராகவும் காட்டப்பட்டுள்ளார். மகாபாரதக் காவியத்தில் அந்தணர்க்கும் சத்திரியர்க்கும் குருவாகத் திகழ்கிறார். பீஷ்மர். துரேணர், துருபத மன்னன் இவரது முக்கிய சீடர்கள். தானொரு அந்தணன் எனப் பொய்யுரைத்து தன்னிடம் வில்வித்தை கற்ற கர்ணனுக்கு உரிய நேரத்தில் அக்கலை உதவாது எனச் சாபமிடுகிறார். எனினும் அவனுக்கு இந்திரன் தனக்கு அளித்த ‘விஜயா’ என்ற வில்லையும் பிரம்மாஸ்திர பிரயோகத்தையும் அளிக்கிறார். தன் தந்தையின் நீர்க்கடன் முடித்தபின், தனது எல்லா அஸ்திரங்களையும் பரசுராமர் துரோணருக்கு அளித்தாக மகாபாரதம் கூறுகிறது.

கம்பர் தனது பரசுராமப் படலத்தில், “இராமபிரான் வில்லை வளைத்ததும் பரசுராமனை நோக்கி, “உனது தாள்களுக்கு உள்ள நடக்கும் வல்லமையையோ, ஒப்பில்லாத தவத்தினால் பெற்றுள்ள நல்லுலகங்களையோ இவற்றில் எதை இதற்கு இலக்காக்குவது? உன் விருப்பம் கூறுக! எனக் கேட்க பரசுராமர், நான் விரைந்து மகேந்திரமலைக்கு மனோவேகமாகச் செல்ல வேண்டியிருப்பதால். என் தவத்தினால் பெற்றுள்ள உலகங்களையே விஷ்ணு வில்லுக்கு இலக்காக்குகிறேன்” என்று கூறியதாகப் பாடியுள்ளார். இராமன் தன் அம்பைப் பூட்டி வில்லை வளைத்து இதனைப் பெற்றதை,

“எய்தவம் பிடைபமு தெய்தி டாமலென்
செய்தவ மியாவையுஞ் சிதைக்க வேயெனக்
கையவ னெணகிழ்தலும் கணையுஞ் சென்றவன்
மையறு தவமெலாம் வாரி மீண்டதே” (பா, 39)

என்ற பாடலால் அறிகிறோம். தன் வாழ்நாள் முழுவதும் வைராக்கியத்துடன் தவமியற்றிப் பெற்ற தவப்பலன்களைப் பெருந்தன்மையுடன் இராமனுக்கு தந்ததோடு அவரை வாழ்த்தியும் விடைபெற்றதாக வால்மீகியும் கம்பனும் கூறியுள்ளனர். இது அவரது மனவுறுதியைக் காட்டுகிறது.

தன் தந்தைக்கு நீர்க்கடன் செய்து முடித்த பின்பு தன்னால் வெற்றி கொள்ளப்பட்ட நிலவுலகைக் காசிப மகாமுனிவனுக்குத் தந்ததாகக் கம்பர் (பா.34) காட்டுகிறார். ஆனால் பாகவதம், “யாகம் நிறைவேற்றிய பரசுராமர் கிழக்குத்திசையை ஹோதா என்ற அந்தணருக்கும் தென்திசையைப் பிரம்மா என்றவர்க்கும் மேற்குத்திசையை அத்வர்யுவிற்கும் வட திசையை உத்காதாவுக்கும் நடுப்பகுதியைக் காசிபமுனிவர்க்கும் இமயமலைக்கும் விந்திய மலைக்கும் இடைப்பட்ட ’ஆர்யாவர்தம்’ என்ற பகுதியை உபத்ரஷ்டா என்ற அந்தணர்க்கும் அளித்தார்” என விரிவாகக் கூறுகிறது.

சிவ பக்தரான பரசுராமர் 108 சிவன் கோயில்களைக் கட்டியதாகவும் அதில் 108 சிவலிங்கங்களை நிறுவியதாகவும் கூறப்படுகிறது. இக்கோயில்களைப் பாதுகாக்க, ’களரி பயிற்று’ என்ற கலையை மக்களுக்கு கற்பித்ததாகவும் கூறுவர். கர்நாடகாவில் உள்ள உடுப்பி, குக்கி சுப்பிமணியா, கொல்லூர், சங்கரநாராயணர், கோடேஸ்வரா,

கும்பாசி, கோகர்னா என்ற ஏழு முக்தித் தலங்களைப் பரசுராமரே அமைத்ததால் அவற்றைப் பரசுராம சேத்திரம் என்று அழைக்கும் வழக்கும் உள்ளது.

**ஆய்வுச் சிக்கல்கள்**

1. பரசுராமர் கார்த்ததவீர்யாச்சுனைனை முதலில் கொன்றாரா? அல்லது தன் தந்தையின் கட்டளைப்படி முதலில் தாயைக் கொ்னறாரா? என்பது தெளிவாகவில்லை. பாகவதத்தில் ஜமதக்னி முனிவர் பரசுராமர் கார்த்தவீர்யாசுனனைக் கொன்றிருக்கக் கூடாது என்றும் கொன்ற பாவத்திற்காக தீர்த்தயாத்திரை செய்ய வேண்டும் எனவும் அறிவுறுத்துகிறார். அரசனைக் கொல்வது பாவம் எனில் தாயைக் கொல்வது பாவமில்லையா? கொன்றபின் உயிர்ப்பித்து விட்டால் பாவம் வராதா? எனில் ஜமதக்னியைக் கொன்ற பாவம் கார்த்தவீர்யாச்சுனனைப் பற்றாதா?
2. சிவனிடமிருந்து பெற்ற வில், பரசு, இந்திரன் அளித்த வில், தன் தாத்தா வழி பெற்ற விஷ்ணு வில் என்பவற்றால் அரச குலத்தை வேரறுத்து வந்தாலும் விஷ்ணு வில் மட்டும் பரசுராமிடம் இருந்தது. சிவதனுசை இராமன் முறித்த ஓசை கேட்டு வெகுண்ட பரசுராமர் அயோத்தி திரும்பும் இராமனுடன் போரிட வருகிறார். எல்லா அஸதிரங்களையும் துரோணருக்கு அளித்த பரசுராமர், விஷ்ணு வில்லை அவரிடம் தராதது ஏன்? பரசுராமரிடமிருந்து இராமன் வில்லைப் பெற்றபின் அதனைப் பாதுகாக்குமாறு வருணனிடம் ஒப்படைப்பது இங்கே குறிப்பிடத்தக்கது.
3. தம் வாழ்நாளில் 21 தலைமுறை அரசர்களைப் பரசுராமர் அழித்திருந்தாலும் கார்த்தவீர்யாச்சுனன் மட்டும் ஏன் மகாபாரதம், பாகவதம், ராமாயணம் என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளார்? சிவபக்தனான ராவணனை வென்ற விஷ்ணு பக்தன் என்பதாலா?
4. சிவனருளால் பிறந்தவர்; சிவனது மாணாக்கர்; அவரது பிள்ளைகளைவிட வலிமையானவர்; இயற்கையை வென்றவர்; 108 சிவலிங்கக் கோயில்களைக் கட்டியவர்; தன் தாயின் முன் செய்த சபதப்படி 21முறை அரசர்களைக் கறுவழித்தார் எனில் மீண்டும் ஏன் தசரதஇராமருடன் போரிட வரவேண்டும்?
5. பரசுராமரைக் குறிக்கும் சிலைகள், அவரால் எழுப்பப்பட்ட கோவில்கள் சைவச் சார்புடையதாய் இருக்க வைணவம் எப்படி அவரை உள் வாங்கியது? வேதத்திலோ உபநிடதத்திலோ, மகாபாரதம், பகவத்கீதையில்கூடப் பரசுராமர் கடவுளாக ஏற்கப்படாத நிலையில், பாகவத புராணம் முதலில் அவரைப் பகவானின் அவதாரம் என ஏன் போற்ற வேண்டும்? கம்பர்கூட அவரைக் கடவுளாகக் காட்டவில்லை, ஒரு வீரராக மட்டும் காட்டுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

பரசுராமர், விஷ்ணுவின் பத்து அவதாரங்களில் ஒருவராகச் சேர்க்கப்பட்டிருப்பதன் பொருளை விளங்கிக்கொண்டால் மேற்கண்ட சிக்கல்கள் அவிழும். வைணவத்தின் அடிப்படையாக விளங்கும் நூல்கள் (காலவரையறைப்படி) வேதம், உபநிடதம்.

மகாபாரதம், பகவத்கீதை, இராமாயணம், விஷ்ணு புராணம், பாகவத புராணம், பிற புராணங்கள் என்பன முக்கியமானவை. இவற்றுள் வேதம், உபநிடதம், மகாபாரதம்–மூலக்கதைப்பகுதி பகவத்கீதை, இராமாயணம் என்ற நூல்களில் அவதாரக் கோட்பாடோ, தசாவதாரம் என்ற கருத்துருவாக்கமோ இல்லை. வராஹம், நரசிம்மம், வாமனம், மனிதன் (கிருஷ்ணன்)" என்ற நான்கு அவதாரங்களை மட்டுமே மகாபாரத ஆரண்யக பர்வமும் மார்க்கண்டேய புராணமும் குறிப்பிடுகிறது. புராணங்களின் எண்ணிக்கை பிற்காலத்தில் கூடியதற்கு ஏற்ப அவதாரங்களின் எண்ணிக்கையும் கூடியது.

"வைணவ அவதாரக் கொள்கை கடவுள் பல்வேறு வடிவங்களை எடுப்பார் என்று மட்டும் கூறாமல் தீயவரை அழித்து நல்லவரைக் காக்கும்பொருட்டு யுகந்தோறும் கடவுள் தோன்றுவார்" என்ற கீதை வாக்கினை உறுதிப்படுத்துகிறது. சக்தி, வலிமை, வளம். ஆகியவற்றை எவை உடையனவே அவையனைத்தும் இறைவனது சக்தியின் ஒரு பகுதியிலிருந்து தோன்றுகிறது என்ற பகவத்கீதை கருத்து, இப்பண்புகளை உடையவர்களைத் தன்னவர்களாக, விஷ்ணுவின் அவதாரங்களாக உள்வாங்கிக்கொண்டது. இத்தன்மை சில சமயம் பிராமணியத்தையும் சில சமயம் மக்கள் இயல்பையும் எடுத்துக்காட்டுகிறது. வைணவத்தின் இந்த இயக்கப்போக்கு வீரவழிபாட்டைப் பேணிக் காப்பதுடன், அரச குடியினர். மேனிலை மாந்தர் விஷ்ணுவின் அவதாரம் என உயர் நிலையாக்கம் பெறவும் உதவுகிறது. இவ்வகையில் பார்க்வராமர் என்ற சத்ரியன், பிறப்பால் விஷ்ணுவின் அவதாரங்களுள் ஒருவராகப் போற்றப்படுகிறார்.